வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

நாள்: 18.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க மத்திய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று இந்திய மருத்துவர் சங்கம், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சியில் மட்டும் அல்லாமல்,நாட்டின் முன்னேற்றத்தில் எப்போதும் ஆர்வம் கொண்டவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ், 188 இந்து- வெளி நாட்டவருக்கு குடியுரிமை சான்றிதழ்களை வழங்கினார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 1 நாள் அரசு முறை பயணமாக இன்று குவைத் நாட்டிற்கு சென்றுள்ளார்.

*இந்திய மருத்துவ சங்கம்* (14)

கொல்கத்தாவில் ஆர்ஜி கர் மருத்துவ கல்லூரியில் நடந்த சம்பவம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இந்திய மருத்துவ சங்கம் கடிதம் எழுதி உள்ளது. சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க மத்திய சட்டத்தை கொண்டு வர பிரதமர் தலையிட வேண்டும் என்றும், அனைத்து மருத்துவமனைகளிலும் பாதுகாப்பு நெறிமுறைகள் விமான நிலையங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்றும் இந்திய மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மருத்துவமனைகளை பாதுகாப்பான மண்டலங்களாக அறிவிக்க வேண்டும் என்றும், முதல் கட்டமாக, கட்டாய பாதுகாப்பு உரிமைகள் வழங்கப் பட வேண்டும் என்றும் கோரியுள்ளது. மேலும், ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் குற்றத்தை உன்னிப்பாகவும், தொழில் ரீதியாகவும் விசாரித்து, உடனடியாக நீதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், உயிரிழந்த மருத்துவரின் குடும்பத்தினருக்கு உரிய மற்றும் கண்ணியமான இழப்பீடு வழங்குமாறு இந்திய மருத்துவ சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

*பிரதமர்-கருணாநிதி* 1 (16)

கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒட்டி அவரது உருவம் பொறிக்கப்பட்ட 100 ரூபாய் நாணயம் வெளியிட்டு விழா சென்னையில் இன்று மாலை நடைபெறுகிறது. முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்று, கருணாநிதி நூற்றாண்டு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட உள்ளார்.

இந்த விழாவிற்கு பாராட்டு தெரிவித்து பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தமிழகத்தின் வளர்ச்சியில் மட்டும் அல்லாமல் நாட்டின் முன்னேற்றத்தில் எப்போதும் ஆர்வம் கொண்டவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்று புகழாரம் சூட்டி உள்ளார். இந்தியாவின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான கருணாநிதியின் நூற்றாண்டு நினைவாக 100 ரூபாய் நாணயம் வெளியிடுவது மிகவும் முக்கியமானது என குறிப்பிட்டுள்ள அவர், இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகத்தில் ஒரு உயர்ந்த ஆளுமை, தமிழகத்தின் வளர்ச்சி, மற்றும் தேசிய முன்னேற்றம் ஆகியவற்றில் எப்போதும் நாட்டம் கொண்டிருந்தவர் கருணாநிதி என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*பிரதமர்-கருணாநிதி* 2 (5)

அரசியல் தலைவராக, முதலமைச்சராக கருணாநிதி நாட்டின் வரலாற்றில் அழியாத சுவடுகளை விட்டுச் சென்றுள்ளதாகவும், மக்களால் முதலமைச்சராக பல முறை தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அவர், மக்களுக்கான கொள்கை மற்றும் அரசியலை நன்றாக புரிந்து வைத்திருந்தார் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். அவரது நூற்றாண்டு நிறைவு நாளில், கருணாநிதிக்கு தமது இதயபூர்வமான மரியாதையை செலுத்துவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமித் ஷா (11)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் சென்றுள்ளார். அகமதாபாத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ், 188 இந்து வெளி நாட்டவருக்கு குடியுரிமை சான்றிதழ்களை அவர் வழங்கினார். அகமதாபாத் மாநகராட்சியில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார். இதில், போதக்தேவில் ஆக்ஸிஜன் பூங்கா, உடற்பயிற்சி கூடம், அகமதாபாத் மக்ராபாத் பகுதியில் நீச்சல் குளம் ஆகியவை அடங்கும். தொடர்ந்து பிரகலாபாத் நகரில் நடைபெறும் பொது விழாவில் அவர் வீடு வீடாக சென்று கழிவு

நீரை சேகரிக்கும் வேன்களை கொடியசைத்து தொடங்கி வைக்க உள்ளார். மேலும், அங்கு நடைபெறும் பொது கூட்டத்திலும் அவர் உரையாற்ற உள்ளார்.

மோடி (15)

உலகளாவிய வளர்ச்சி ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உலகளாவிய தெற்கின் குரல் 3 ஆவது மாநாட்டில் காணொளி வாயிலாக உரையாற்றிய பிரதமர், உலகம் முழுவதும் நிச்சயமில்லாத சூழல் நிலவி வருவதால் மனிதர்களை மையமாக கொண்ட உலகளாவிய வளர்ச்சி ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்தியாவின் வளர்ச்சி பயணம் மற்றும் கூட்டாண்மை மூலம் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தின் அடித்தளம் இருக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். தெற்குலக நாடுகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செயல்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இதற்காக இந்த அமைப்பின் உறுப்புநாடுகள் ஒருவர் மற்றொருவருக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் அனுபவங்கள் மற்றும் தேவைகளை பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (10)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 1 நாள் அரசு முறை பயணமாக இன்று குவைத் நாட்டிற்கு சென்றார். குவைத்தில் பட்டத்து இளவரசர் திரு ஷேக் சவா அல் கலித் அல் சபா-வை சந்தித்து பேசினார். இது தொடர்பாக தமது சமூக ஊடகப் பதிவில் டாக்டர் ஜெய்சங்கர் கூறுகையில், இந்தியாவும், குவைத்தும் பல நூற்றாண்டுகளாக பழமையான நல்லெண்ணம் மற்றும் நட்பை பகிர்ந்து கொள்வதாக தெரிவித்தார்.

இந்த பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம், மக்களிடையேயான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் பகிர்ந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

குரங்கம்மை (18)

குரங்கம்மை பாதிப்பை சர்வதேச அளவிலான பொது சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளதை அடுத்து, இந்தியாவில் இது தொடர்பான ஆயத்த நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று மாலை நடைபெற்றது. மத்திய சுகாதார அமைச்சர்

திரு ஜே பி நட்டா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் உலக சுகாதார அமைப்பு, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், பூச்சிகளால் பரவும் நோய் கட்டுப்பாட்டிற்கான தேசிய மையம், சுகாதார சேவைகள் தலைமை இயக்குநர் மற்றும் எயிம்ஸ் மருத்துவமனை நிபுணர்கள் பங்கேற்றனர். இந்தியாவில் இதுவரை குரங்கம்மை பாதிப்பு இல்லை என்ற போதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் சர்வதேச எல்லைப் பகுதிகளில் உள்ள சுகாதார நிலையங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்துவதுடன் பரிசோதனை கூடங்களையும் ஆயத்த நிலையில் வைக்க அறிவுறுத்தப் பட்டது. குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கி பழகுவதன் மூலமும், அவர்கள் அணிந்த உடை, போர்வை போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலமும், உடலுறவு வாயிலாகவும் இந் நோய் பரவக் கூடியது என்பதால், தனி மனித கட்டுப்பாடு அவசியம் என்றும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மோடி வாழ்த்து (7)

தாய்லாந்து பிரதமராக தேர்வு செய்யப்பட்ட பேடோங்டார்ன் ஷினவத்ராவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில்,

அவருக்கு வெற்றிகரமான பதவிக் காலம் அமைய வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும், தாய்லாந்திற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த அவருடன் இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

*ராஜ்நாத் சிங்* (6)

சென்னையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடலோர காவல் படை, கடல் சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் ஆகியவற்றிற்கான புதிய கட்டிடத்தை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று திறந்து வைத்தார். அத்துடன் கடல் மாசு நிவாரண மையம், புதுச்சேரியில் கடலோர காவல் படை விமான வளாகம் ஆகிய இரண்டு கூடுதல் வசதிகளையும் அவர் திறந்து வைத்தார்.

*நிர்மலா சீதாராமன்* (14)

மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சி பாதையை பின்பற்றுவது வளரும் நாடுகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். உலகளாவிய தெற்கு நாடுகளின் குரல் மாநாட்டின் ஒரு பகுதியாக

நடைபெற்ற நிதி அமைச்சர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று பேசிய அவர், வளரும் நாடுகள் எதிர் கொள்ளும் சவால்களுக்கு தீர்வுக்கான நீடித்த வளர்ச்சி பாதை இலக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார். பல்வேறு நாடுகள் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் சமூக சவால்களுக்கு வளர்ச்சீ தான் சிறந்த மாற்றமாக அமையும் என்று அவர் குறிப்பிட்டார். எனவே, மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சி பாதையை பின்பற்றுவதன் மூலம் இது போன்ற பிரச்சனைகளை எதிர் கொள்வதற்கு உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார். யுக்திகளை வகுப்பது, ஒருங்கிணைப்பது ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மருத்துவர் வழக்கு (9)

கொல்கத்தா மருத்துவ கல்லூரி மருத்துவர் பலாத்காரம் மற்றும் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சஞ்சய்ராய் க்கு மத்திய புலனாய்வு பிரிவு உளவியல் ரீதியான சோதனை நடத்த உள்ளது. டெல்லியில் உள்ள மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் ஆய்வாளர்கள் குழு தேவையான சோதனைகளை நடத்த கொல்கத்தா வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் ஆர்ஜிகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முன்னாள் முதல்வர் டாக்டர் சந்திப் கோஷிடம் சிபிஐ

தொடர்ந்து 2 வது நாளாக விசாரணை நடத்தியது. மற்றொரு சுற்று விசாரணைக்காக சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது.

*வானிலை (7)*

கேரளா, மாகே, லட்சத்தீவு, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய மாநிலங்களில் ஒரு சில இடங்களில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 7 நாட்களில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால், கடலோர ஆந்திர பிரதேசம், ஏனாம், தெலங்கானா ஆகிய இடங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க மத்திய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று இந்திய மருத்துவர் சங்கம், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சியில் மட்டும் அல்லாமல்,நாட்டின் முன்னேற்றத்தில் எப்போதும் ஆர்வம் கொண்டவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ், 188 இந்து- வெளி நாட்டவருக்கு குடியுரிமை சான்றிதழ்களை வழங்கினார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 1 நாள் அரசு முறை பயணமாக இன்று குவைத் நாட்டிற்கு சென்றுள்ளார்.